TAMIL NADU LEGISLATURE LIBRARY
17 NOV 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1971 மார்ச் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப பேரவைத் தலைவர் (திரு. மு. சண்முகம் அவர்கள்) தலைமையில பேரவை கூடியது.

1. உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. மு. சண்முகம்) : இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வது ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால், அவர்கள் இப்பொழுது இங்கு வந்து உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.

(உறுதிமொழி எடுத்துக்கொள்ள ஒருவரும் முன்வரவில்லை.)

2. பேரவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. மு. சண்முகம்) : அடுத்து, 'அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல்' ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர் களின் நியமனத் தாள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்க பட்டிருக்கிறது. சட்டப் பேரவை விதிகளின் 4 (4) விதியின்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன் மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். அவர்களின் விவரம் பின்வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள்.

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள்.

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு 'நியமனம் செய்யப்பட்டிருப்பதால் நான், 'திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கிறார்' என்று மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். **(ஆரவாரம்.)**

இத்துடன் என்னுடைய அலுவல் இனிது முடிவடைகிறது. இப் பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு எனது உள மார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பேரவைத் தலைவரவர்கள் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று, அவர்கள் அமர்ந்தபின், எல்லோரும் தங்கள் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவரும், திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும் அழைத்துவந்து, அவர் இருக்கையில் அமரச்செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

(பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை அழைத்துவந்து, அவர் இருக்கையில் அமரச் செய்தார்கள்.)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், 'பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்' ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான நியமனத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதன்முதலில் இப் பேரவைக்கு அறிவிக்கிறேன். அவர்களின் விவரம் பின்வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. பெ. சீனிவாசன் அவர்கள்.

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள்.

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் இந்தப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (ஆரவாரம்.)

பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. சீனிவாசன் அவர்கள் வழக்கறிஞர்; மாணவர் இயக்கத்திலே ஈடுபட்டு, பொது வாழ்விலே சம்பந்தப்பட்டவர். நல்ல சட்ட நிபுணத்துவம் உடையவர். இந்தப் பொறுப்பில் வெற்றிபெற வேண்டுமென்று அவர்களுக்கு என் பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]